செ.வெ.எண்: 152/2020 நாள்: 14.03.2020

**மீசநல்லூா் கிராமத்தில் ரூ.6.61 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 100 இருளா் குடும்பங்களுக்கான புதிய வீடுகளின் கட்டுமானப் பணிகள் மாவட்ட ஆட்சித் தலைவா் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு...**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், தெள்ளாா் ஊராட்சி ஒன்றியம், மீசநல்லூா் கிராம ஊராட்சியில், இன்று (14.03.20209) பழங்குடியினா் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம், உட்பட பல்வேறு துறைகளின் மூலமாக ரூ.6.61 கோடி மதிப்பீட்டில் 100 இருளா் குடும்பங்களுக்கான புதிய வீடுகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித் தலைவா் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவா்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தாா். இந்த ஆய்வின்போது, மாவட்ட ஊரக வளா்ச்சி முகமை திட்ட இயக்குநா் திருமதி. பா. ஜெயசுதா, செய்யாறு வருவாய் கோட்ட அலுவலா் திருமதி. கே. விமலா, திட்ட அலுவலா் பழங்குடியினா் நலன் திரு. இளங்கோவன், உதவி ஆட்சியா் (பயிற்சி) திரு. அனந்த்மோகன், இ.ஆ.ப., துணை ஆட்சியா் (பயிற்சி) செல்வி. மந்தாகினி, அரசு அலுவலா்கள், வீடுகளை பெறும் இருளா் குடும்பங்கள் மற்றும் பொதுமக்கள் உடன் இருந்தனா்.

தெள்ளாா் ஊராட்சி ஒன்றியம், மீசநல்லூா் கிராமத்தில் பழங்குடியினா் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்திக் கீழ் 2015-2016 ஆம் ஆண்டு ரூ.1.44 கோடி மதிப்பீட்டிலும், ஊரக வளா்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாக 2017-2018 ஆம் ஆண்டு மூலதன மான்ய நிதி திட்டம், 2018-2019 மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.32.00 இலட்சம் மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் ரூ.1.76 கோடி மதிப்பீட்டில் 43 இருளா் குடும்பங்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளுடன் புதிய வீடுகள் முதல் கட்டமாக 13.10.2018 அன்று ஒப்படைக்கப்பட்டது. தற்போது, மீசநல்லூா் கிராமத்தில் பழங்குடியினா் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம், ஊரக வளா்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் மாவட்ட மினரல் ∴பவுண்டேஷன் நிதி, மாவட்ட தொழில் மையம், கால்நடை பராமரிப்புத் துறை, ஆகிய துறைகளின் கீழ் ரூ.6.61 கோடி மதிப்பீட்டில் 100 இருளா் குடும்பங்களுக்கு அனைத்து அடிப்படை வசதிகளுடன் இரண்டாம் கட்டமாக புதிய வீடுகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியா் அவா்கள் இன்று 14.03.2020 நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தாா்.

மீசநல்லூரில் கட்டப்பட்டு வரும் 100 இருளா் குடியிருப்பு வீடுகள், 2016-2017 ஆம் ஆண்டு பழங்குடியினா் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கழிப்பறை வசதியுடன் தலா ரூ.2.65 இலட்சம் வீதம் ரூ.2.65 கோடி மதிப்பீட்டிலும், மழைநீா் கால்வாய் கட்டமைப்பு ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டிலும், மின்சார வசதி தலா ரூ.15,000/- வீதம் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டிலும், 60,000 லிட்டா் கொள்ளளவு மேல்நிலை நீா்தேக்கத் தொட்டி ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டிலும், சமுதாயக் கூடம் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டிலும், அங்கன்வாடி மையம் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டிலும், கூட்டுறவு பால் உற்பத்தியாளா்கள் சங்க கட்டடம் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டிலும், நவீன பூங்கா ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டிலும், மாடு கொட்டகை ரூ.37.50 இலட்சம் மதிப்பீட்டிலும், என மொத்தம் ரூ.4.42 கோடி மதிப்பீட்டிலும், புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் மாவட்ட மினரல் ∴பவுண்டேஷன் நிதி திட்டத்தின் கீழ் 2018-2019 ஆம் ஆண்டு திறந்தவெளி கிணறு ரூ.15.50 இலட்சம் மதிப்பீட்டிலும், ஊரக வளா்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மூலமாக மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் 2019-2020 ஆம் ஆண்டு 390 மீட்டா் சிமெண்ட் சாலை ரூ.27.20 இலட்சம் மதிப்பீட்டிலும், 950 மீட்டா் தாா் சாலை ரூ.37.50 இலட்சம் மதிப்பீட்டிலும், செங்கல் சூளை அமைக்க மாவட்ட தொழில் மையம் மூலமாக லாாி, ஜெ.சி.பி. இயந்திரம், 2 டிராக்டா் உட்பட உபகரணங்கள் ரூ.81.00 இலட்சம் மதிப்பீட்டிலும், ஊரக வளா்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மூலமாக செங்கல் சூளை அலுவலகம் மற்றும் பம்ப் அறை ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டிலும், தொழிலாளா்கள் தங்கும் நிழற்கூடம் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டிலும், சேமிப்பு கொட்டகை ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டிலும், கால்நடை பராமரிப்புத் துறை மூலமாக 100 கறவை பசுக்கள் ரூ.45.00 இலட்சம் மதிப்பீட்டிலும், என மொத்தம் ரூ.2.19 கோடி மதிப்பீட்டிலும், ஆக மொத்தம் ரூ.6.61 கோடி மதிப்பீட்டில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

வந்தவாசி வட்டம், ராமசமுத்திரம் கிராமத்தில் நீர்நிலை பகுதியில் குடிசை வீட்டில் வசித்து வரும் கொத்தடிமையில் இருந்து மீட்கப்பட்டுள்ள சுகுணா (வயது 30) தங்களுக்கு மீசநல்லூர் கிராமத்தில் புதிய வீடுகள் வழங்குவது குறித்து தெரிவிக்கையில் ‘என் பெயர் சுகுணா, கணவர் பெயர் லட்சுமணன் (வயது 34), நான் 100 நாள் வேலை மற்றும் கூலி வேலையும், எனது கணவர் தினக் கூலி வேலை செய்து மிகவும் ஏழ்மையான நிலையில் எங்கள் குடும்பத்தை காப்பாற்றி வருகிறோம். எங்களுக்கு 3 பெண்கள், 1 ஆண் என 4 குழந்தைகள் உள்ளனர், குழந்தைகள் அனைவரும் 9-ம், 7-ம், 4-ம், 1-ம் வகுப்பு படித்து வருகிறாகள். ஒரு காலத்தில் எங்கள் குடும்பத்தினர் காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், வள்பிறை கிராமத்தில் கொத்தடிமைகளாக மரம்வெட்டுதல் உட்பட பல்வேறு வேலைகள் செய்து வந்தோம். கடந்த 2010 ஆம் ஆண்டு எங்கள் குடும்பத்தினர் அரசு மூலம் மீட்கப்பட்டனர்.

தற்போது நாங்கள் வசித்து வரும் ராமசமுத்திரம் கிராமத்தில் எங்கள் குடும்பம் உட்பட 3 குடும்பத்தினருக்கு மீசநல்லூர் கிராமத்தில் அரசு மூலம் புதிய வீடுகள் கட்டிதரப்பட்டு வருகிறது. காலம் காலமாக எங்கள் சமுதாயத்தினர் பலர் கொத்தடிமைகளாக பரம்பரை பரம்பரையாக மிகவும் கஷ்டபட்டு வாழ்ந்து வந்துள்ளோம். அரசு எங்களை மீட்டு பல்வேறு உதவிகளை செய்து தந்துள்ளது. இது நாள் வரை சிறிய குடிசை வீட்டில் மழை காலங்களிலும், எந்தவித பாதுகாப்பும் இல்லாமலும், வாழ்ந்து வந்தோம். தற்போது மீசநல்லூர் கிராமத்தில் எங்கள் சமுதாயத்தினருக்கு 100 வீடுகள் அனைத்து வசதிகளுடனும், எங்கள் பொருளாதாரத்திற்கு உதவிடும் வகையிலும் கட்டித்தரப்பட்டு வருகிறது. எங்கள் வாழ்க்கையில் ஒளி விளக்கேற்றி, முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்வதற்கு வழிவகை செய்துள்ள தமிழ்நாடு அரசுக்கும், அதிகாரிகளுக்கும், அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்’ என்றார்.

மேலும், முதல் கட்டமாக வழங்கப்பட்டுள்ள 43 இருளர் குடும்பங்களுக்கான வீடுகளில் வசித்து வரும் பச்சையம்மாள் (வயது 42) தெரிவிக்கையில் ‘என் பெயர் பச்சையம்மாள், எனது கணவர் பெயர் லோகு (வயது 48). எங்களது மகன் பார்த்திபன் (வயது 20) தெள்ளார் பகுதியில் உள்ள தனியார் பாலிடெக்னிக் கல்லூரியில் இறுதி ஆண்டு படித்து வருகிறார். நானும் எனது கணவரும் தினக்கூலி வேலை செய்து எங்கள் குடும்பத்தை நடத்தி வருகிறோம். இதற்கு முன்பாக எங்கள் குடும்பம் தெள்ளார் ஊராட்சி ஒன்றியம், டி.மாம்பட்டு கிராமத்தில் 20 குடும்பங்களுடன் கூரை வீட்டில் வசித்து வந்தோம். மழை காலங்களில் வீட்டில் தங்குவது சிரமமாக இருக்கும். எனக்கு 100 நாள் வேலை அட்டையும் வழங்கப்பட்டு, அதன் மூலமும் எங்களுக்கு வருமானம் கிடைத்து வருகிறது. பரம்பரை பரம்பரையாக எங்கள் குடும்பத்தினர் யாரும் படித்தில்லை, குறிப்பாக எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் அதிகம் படிப்பதில்லை. இந்த நிலையை மாற்றிட வேண்டும் என்பதற்காக எங்கள் மகனை பாலிடெக்னிக் படிக்க வைத்துள்ளோம்.

இங்கு வசிக்கும் 43 இருளர் குடும்பங்களில் உள்ள குழந்தைகளில் தற்போது முதல் முதலில் கல்லூரி படிப்பு படிப்பது எங்கள் மகன் என்பது பெருமையாக இருக்கிறது. எங்களை போல் குழந்தைகளும் மரம் வெட்டும் கூலி வேலை செய்யக்கூடாது என்பதற்காக தற்போது பெரும்பாலாள குழந்தைகள் பள்ளிக்கு அனுப்பி வருகிறேம். நாங்கள் படுகின்ற கஷ்டம் எங்கள் குழந்தைகள் பெறக்கூடாது, இந்த கஷ்டம் எல்லாம் எங்கள் தலைமுறையுடன் முடிய வேண்டும் என்பதற்காக படிக்க அனுப்புகிறோம். அரசு மூலம் வழங்கப்படும் ஆதார் அட்டை, ஜாதிச் சான்றிதழ், குடும்ப அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, மருத்துவ காப்பீட்டு அட்டை ஆகிய அட்டைகள் எங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எங்கள் சமுதயாத்தினரின் வளர்ச்சிக்காக, தண்ணீர், மின்சார வசதி, சாலை, தெருவிளக்கு, தொட்டி, கழிப்பறை ஆகிய அனைத்து அடிப்படை வசதிகளுடன் தமிழ்நாடு அரசு எங்களுக்கு புதிய வீடுகள் கட்டிக் கொடுத்து எங்கள் வாழ்க்கை மேம்பட செய்துள்ளார்கள். மேலும், எங்கள் வாழ்வாதாரத்திற்காக கறவை மாடுகள் வழங்கியுள்ளார்கள், அதன் மூலம் கிடைக்கும் வருமானம் எங்களுக்கு பெரும் உதவியாக உள்ளது. தமிழக அரசுக்கும், மாவட்ட நிர்வாகத்திற்கும் எங்கள் பகுதி மக்களின் சார்பாக மணமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்’ என்றார்.

பச்சையம்மாள் மகன் பார்த்திபன் தெரிவிக்கையில் ‘எனது தாய், தந்தை பல்வேறு கஷ்டங்களுக்கு இடையே என்னை படிக்க வைத்துள்ளார்கள். தற்போது நான் தெள்ளார் பகுதியில் உள்ள தனியார் பாலிடெக்னிக் கல்லூரியில் மெகானிக்கல் பிரிவில் மூன்றாம் ஆண்டு படித்து வருகிறேன். இதற்கு முன்பாக நாங்கள் வசித்து வந்த கூரை வீட்டில் மிகவும் சிரமப்பட்டு படித்து வந்தேன். தற்போது எங்களுக்கு புதிய வீடு வழங்கப்பட்டுள்ளது, இந்த வீட்டில் மின்சாரம் இல்லை என்றாலும், சோலார் பேட்டரி மூலம் படித்து, படிப்பில் அதிக கவனம் செலுத்துகிறேன். நாங்கள் இதற்கு முன்பாக வசித்து வந்த வீட்டில் இருந்த போது எங்களின் நிலையினை பார்த்த அரசு, இனி மேல் இந்த மாதிரி இடத்தில் நீங்கள் இருக்க வேண்டாம், படிக்கவும், முன்னேறவும் உங்களுக்கு மாற்று இடத்தில் புதிய வீடுகள் வழங்கப்படும் என்றார்கள். நான் எங்கள் பகுதியில் முதல் பட்டதாரி, அதனால் என்னை போல அனைவரும் படிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகிறேன். தற்போது எங்கள் பகுதியில் வசிக்கும் 30-க்கும் மேற்பட்ட குழந்தைகள் பள்ளிப் படிப்பு படித்து வருகிறார்கள். மேலும், சமீபத்தில் எங்கள் கல்லூரியில் நடைபெற்ற தனியார் நிறுவனங்களின் வேலைவாய்ப்பு நேர்காணல் நடத்தப்பட்டது. இதில் நான் கலந்து கொண்டு சென்னை பாடியில் உள்ள தனியார் நிறுவனத்தில் மாதம் ரூ.15,000/-ம் சம்பளத்தில் தேர்வு செய்யப்பட்டு நியமன உத்தரவு வழங்கப்பட்டது. இந்த வாய்ப்பு கிடைத்தது என் பெற்றோர் பட்ட கஷ்டத்திற்கு பரிசாக நினைக்கிறேன். எங்கள் சமுதாய மக்களின் கல்வி வளர்ச்சிக்காகவும், பொருளாதார முன்னேற்றத்திற்காவும் நான் என்றும் பாடுபடுவேன்’ என்றார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**